புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **23 ஜனவரி 2023**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டு துறையின் மூலம் வறுமை கோட்டிற்குகீழ் உள்ள 21 முதல் 55 வயதுக்குட்பட்ட குடும்பத் தலைவர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத் தொடக்க விழா கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று (23-01-2023) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் குத்துவிளக்கேற்றி பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார். இன்று பெண்குழந்தைகள் தினத்தை ஒட்டி, மேடையில் "மகளைக் காப்போம் மகளுக்கு கற்பிப்போம்" கையெழுத்து விழிப்புணர்வு இயக்கத்தையும் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், பொதுப்பணி அமைச்சர் திரு க. லட்சுமிநாராயன், வேளாண் மற்றும் மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு க. ஜெயக்குமார், சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு P. ராஜவேலு, அரசு கொறடா திரு AKD @ V ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு KSP @ S. ரமேஷ், திரு லட்சுமிகாந்தன், நலத்துறைச் செயலர் திரு உதயகுமார், இயக்குனர் திருமதி முத்துமீனா ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாவில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- இந்த திட்டம் நல்லதொரு திட்டம். பெண்கள் கையில் பணம் இருந்தால் அது சுயநலத்திற்காக அல்ல குடும்பத்திற்காகதான் இருக்கும் என்பதை உணர்ந்து இந்த அரசு இந்த திட்டத்தை கொடுத்திருக்கிறது.
- பாரதப் பிரதமரின் அலுவலகத்தில் இருந்து ஒரு ஆய்வு அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. அதிகாரப்பூர்வமான ஆய்வறிக்கை. அதில் வாழ்வாதாரம், சுகாதாரம், குடிநீர் வசதி ஆகியவற்றில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக புதுச்சேரி திகழ்கிறது என்ற பெருமை நமக்கு கிடைத்திருக்கிறது. இது கடந்த ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் எடுக்கப்பட்ட கணக்கு.
- இந்தியாவின் ஒரு முன்னணி பத்திரிக்கை ஒரு கணக்கெடுப்பு நடத்தி வெளியிட்டது. பத்தாததுக்கு இடத்தில் இருந்த புதுச்சேரி இந்த அரசு ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டுக்குள் ஆறாவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறது என்று. இதுவும் அதிகாரப்பூர்வமான செய்தி. குறிப்பாக சுகாதாரத்தில் இந்தியாவிலேயே முதல்

மாநிலமாக புதுச்சேரி திகழ்கிறது என்று இந்தியா டுடே கணக்கெடுப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. நடுநிலையான பத்திரிகையும் பிரதமர் அலுவலக அறிக்கையும் சொல்லுகிறது. ஆகையால் புதுச்சேரி முன்னேறி வருகிறது என்பதை அனைவரும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

- தாய்மார்களுக்கு உதவித் தொகை கொடுக்கும் முதல் அரசாக இந்த அரசு திகழ்கிறது. அதற்காக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் மக்களுக்கான பல நல்ல திட்டங்கள் வரும். பெண்களுக்கு சலுகை தரும்போது அவர்கள் பெயரில் சொத்து வாங்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். பாரதப் பிரதமரும் இலவச எரிவாயு திட்டத்தை தொடங்கும்போது அது பெண்கள் பெயரில் தான் பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார்.
- மத்திய அரசும், மாநில அரசும் தாய்மார்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த அரசு பெண்களுக்காக பல திட்டங்களை செயல்படுத்துகிறது. நான் துணைநிலை ஆளுநராக பதவி ஏற்றதும் முதலமைச்சர் என்னிடம் தந்த முதல் கோப்பு முதியோர் உதவித்தொகை உயர்த்துவதற்கான கோப்பு. அதில் தான் கையெழுத்து விட்டேன்.
- புதுச்சேரி மக்களுக்கு குடியரசு தினத்தன்று பெரிய பரிசு கிடைத்திருக்கிறது. தாய்மார்கள் கையில் பணம் இருந்தால் அது குடும்பத்திற்கு கிடைத்தது மாதிரி. குடும்பத்தல் அவர்கள் மகிழ்ச்சியை கொண்டு வருவார்கள். புதுச்சேரி மகிழ்ச்சியாக இருக்கப்போகிறது.